# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8069900

C

1. District : ஈரோடு மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் ஈரோடு | Year: 2021 ஆண்டு | FIR No.: 7/AC/2021 மு.த.அ. எண் | Date: 20.07.2021 நாள்

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as Amended — Sections பிரிவுகள்: 7(a),
   (ii) Act சட்டம்: by The P.C. (Amendment) — Sections பிரிவுகள்: 7(b)
   (iii) Act சட்டம்: Act 2018 — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — | Date from : நாள் முதல் 18.2.2021 | Date to : நாள் வரை 15.07.2021 மற்றும் 16.07.2021
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை —
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.07.2021 | Time : நேரம் 17.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol III | Time : நேரம் 19.7.2021 / 17.00 மணி, 20.7.2021 / 08.00 மணி

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 25 கி.மீ தெற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி வடுகபட்டி-அ-கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் அரச்சலூர், மொடக்குறிச்சி வட்டம், ஈரோடு மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. புவனேஸ்வரி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கிட்டான் (லேட்)
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1982 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் தனியார் நிறுவனத்தில் வேலை | (g) Address : முகவரி ரெவன்யு காலனி தெற்கு வீதி, தொட்டையம்பாளையம் கொங்கம்பாளையம், சித்தோடு, ஈரோடு மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. M. வெற்றிவேல், கிராம நிர்வாக அலுவலர், வடுகபட்டி-அ-கிராமம், மொடக்குறிச்சி வட்டம், ஈரோடு மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: தாமதமில்லை
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

தனித்தாளில் தனியேயும் நடவடிக்கை செய்து இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......—........ Rank ......—........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் திரு. C. ராஜேஷ் பதவி D.S.P. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு உ.பொ.க. பிரிவு, ஈரோடு காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

JBb 20/7/21

Rekha 20.7.21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.07.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 08.30 மணி

Name: பெயர் M. ரேகா
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ..........
உ.பொ.க. பிரிவு, ஈரோடு

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 07/AC/2021 u/s 7(a), 7(b) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 19.07.2021 தேதி மாலை 17.00 மணிக்கு நிலைய அலுலவலில் இருந்தபோது K.புவனேஸ்வரி, க/பெ குமார் (லேட்), ரெவன்யு காலனி முதல் வீதி, சொட்டையம்பாளையம், கொங்கம்பாளையம், சித்தோடு, ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் K.புவனேஸ்வரி, க/பெ குமார் (லேட்), ரெவன்யு காலனி முதல் வீதி, சொட்டையம்பாளையம், கொங்கம்பாளையம், சித்தோடு, ஈரோடு மாவட்டம். பெறுதல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்புப் பிரிவு அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் ஈரோடு மாவட்டம், சித்தோடு, கொங்கம்பாளையம், சொட்டையம்பாளையம், ரெவன்யு காலனி முதல் வீதியில் எனது மகன் ஹரீஷ் மற்றும் எனது அம்மா சிவகாமி ஆகியோருடன் குடியிருக்கிறேன். நான் ஈரோடு நவீனா ஏஜென்சி என்ற தனியார் நிறுவனத்தில் பேட்டரி சேல்ஸ் மற்றும் சர்வீஸ் செக்சனில் வேலை பார்த்து வருகிறேன். எனது கணவர் திரு.குமார் அவர்கள் கடந்த 2010 ஏப்ரல் மாதத்தில் ஈரோடு மாவட்டம், சிவகரி, வடுகபட்டி கிராமத்தில் ரீ.சர்வே எண்.664/1-ல் 948-3/4 சதுரடி மனை நிலத்தினை விலைக்கு வாங்கி அவரது பெயரில் சுத்தக்கிரயம் செய்தார். அது சிவகிரி சார்பதிவக ஆவண எண்.1036/2010 ஆக பதிவானது. பின்னர், எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் அந்த மனை நிலத்தை எனது பெயரில் சிவகிரி ஆவண எண்.942/2014-ன் படி தான செட்டில்மென்ட் செய்து வைத்தார். மேற்படி நிலத்திற்கு பட்டா மாறுதல் எதுவும் செய்யவில்லை. எனது கணவரின் மருத்துவ செலவுக்கு எனது சொந்தக்காரர்களிடம் கடன் வாங்கியிருந்ததால், நிலத்தை விற்கலாம் என நினைத்து நில புரோக்கர்களை சந்தித்தேன். அப்போது, அவர்கள் நிலத்தை எனது பெயரில் பட்டா மாறுதல் செய்யுமாறு சொன்னார்கள். எனவே, நான் வடுகப்பட்டி-அ கிராம நிர்வாக அலுவலர் திரு.M.வெற்றிவேல் அவர்களை அரச்சலூரில் உள்ள அவாது அலுவலகத்தில் 2021ம் வருடம் பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் சந்தித்தேன். பிறகு, அவரிடம் எனது பெயரில் இருக்கும் நிலத்திற்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்ய கேட்டேன். அப்போது அவர் பட்டா மாறுதல் செய்ய 5 ஆயிரம் ரூபாய் பீஸ் கட்ட செலவாகும் என்றும், 5 ரூபாய் கொடுத்தால் தானே அனைத்து வேலைகளையும் பார்த்துக்கொள்கிறேன் என்று சொன்னார். அப்போது நான் அவ்வளவு தொகை என்னிடம் இல்லை சார் என்று சொன்னேன். அதற்கு அவர் 1000 ரூபாய் குறைத்து கொண்டு 4 ஆயிரம் ரூபாய் கொடு என்று சொன்னார். மேலும், என்னிடம் இருந்த பத்திர நகல்,

ஆதார் அட்டை நகல், ரேசன் கார்டு நகல் ஆகியவற்றை கேட்டு வாங்கி கொண்டார். எனது செல்போன் நம்பரை கேட்டார். நான் எனது செல்போன் எண். 8667087094-ஐ சொன்னேன். மேலும், அவர் அவரது செல்போன் எண்.9626955068-ஐ எனக்கு கொடுத்தார். நான் அதை எனது செல்போனில் பதிவு செய்து கொண்டேன். மேலும், திரு.வெற்றிவேல் அவர்கள் தனது அக்கவுண்ட் நம்பரையும், மற்றும் கூகுள் பே எண்ணான அவரது மற்றொரு செல்போன் எண்.9080097662-ஐயும் கொடுத்தார். மேலும், பட்டா மாறுதலுக்கான பணம் 4 ஆயிரம் ரூபாயை கூகுள் பே மூலம் அனுப்புங்க, உடனே பட்டா மாறுதல் செய்ய ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். கிராம நிர்வாக அலுவலர் திரு.வெற்றிவேல் பட்டா மாறுதல் செய்வதற்காக கேட்ட 4 ஆயிரம் ரூபாய் கவர்மெண்டுக்கு பீஸ் தான் என்று நினைத்து 13.2.2021-ம் தேதி எனது அக்கா மகள் கீதா அவர்களின் கூகுள் பே எண்.6379935934 மூலம் கிராம நிர்வாக அலுவலர் திரு.வெற்றிவேல் அவர்களின் கூகுள் பே எண்.9080097662-ற்கு ரூ.4000/- அனுப்பினேன். பின்னர், அந்த விசயத்தை திரு.வெற்றிவேல் அவர்களுக்கு தெரிவித்தேன். பின்னர், கடந்த 18.02.2021 அன்று திரு.கதிர்வேல் அவர்கள் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்.8667087094-ற்கு கூப்பிட்டு பட்டா மாறுதல் உத்தரவு ரெடியாகிவிட்டது வந்து வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் அன்றையதினமே வடுகப்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று திரு.வெற்றிவேல் அவர்களை சந்தித்து பட்டா மாறுதல் உத்தரவை பெற்றேன். அது எனக்கும், சின்னம்மாள் என்பவருக்கும் கூட்டு பட்டாவாக இருந்ததால், அவரிடம் நான் தனிப்பட்டா வேண்டும் சார் என்றேன். அதற்கு அவர் தனிப்பட்டா வேண்டுமென்றால் 15 ஆயிரம் செலவாகும் என்று சொன்னார். நானும் கவர்மென்ட் பீஸ் தான் என்று நினைத்து அவ்வளவு பணம் தற்போது என்னிடத்தில் இல்லை சார், ஏற்பாடு செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். கடந்த 25.02.2021 அன்று என்னை செல்போனில் தொடர்பு கொண்ட கிராம நிர்வாக அலுவலர் திரு.வெற்றிவேல் அவர்கள் தனிப்பட்டாவிற்கு நான் கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் முதலில் கூகுள் பே-ல் 5 ஆயிரம் அனுப்புகிறேன் என்றும், இரண்டு மூன்று நாட்களில் மீதி பணம் 10 ஆயிரம் தருகிறேன் என்றும் சொன்னேன். அதுபோலவே 26.02.2021 அன்று மீண்டும் என் அக்கா மகள் கீதா அவர்களின் கூகுள் பே எண்.6379935934 மூலம் கிராம நிர்வாக அலுவலர் திரு.வெற்றிவேல் அவர்களின் கூகுள் பே எண்.9080097662-ற்கு ரூ.5000/- அனுப்பினேன். பின்னர், கடந்த 2.3.2021 அன்று வடுகப்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று திரு.வெற்றிவேல் அவர்களை சந்தித்து அவர் கேட்ட மீதித்தொகை ரூ.10000/-ஐ பீஸ் என நினைத்து அவரிடம் கொடுத்தேன். அதை அவர் வாங்கி வைத்துகொண்டு சரிம்மா நீங்க கிளம்புங்க பைல் ரெடி பண்றேன், பார்த்துக்கலாம் என்றார். நான் கிளம்பி வந்துவிட்டேன். பின்னர், சிறிது நாள் கழித்து நான் எனது செல்போன் நம்பரிலிருந்து கிராம நிர்வாக அலுவலர்

திரு.வெற்றிவேல் அவர்களை கூப்பிட்டு எனது தனிபட்டா பற்றி கேட்டேன். அதற்கு அவர் எலக்சன் முடியட்டும் பார்த்துக்கலாம் என்று சொன்னார். அதன்பின்னர், ஒரு சில முறை அவரிடம் எனது பட்டா மாறுதல் பற்றி செல்போனில் கேட்டபோது, அதற்கு அவர் கொரானா பரவல் காரணமாக லாக்டவுனில் இருப்பதால் லாக் டவுன் முடியட்டும் பின்னர் பார்த்துக்கலாம் என்று சொன்னார். நானும் லாக்டவுன் முடியட்டும் பார்த்துக்கலாம் என்று இருந்து விட்டேன். பின்னர், 08.07.2021 அன்று வெற்றிவேல் அவர்கள் அவரது செல்போன் நெம்பர் 9080097662-லிருந்து எனது செல்போன் நெம்பர் 8667087094ற்கு கூப்பிட்டு மேலும், 10 ஆயிரம் ரூபாய் கேட்டார். அதற்கு நான் ஏற்கனவே நீங்கள் கேட்ட தொகை ரூ.15000/- கொடுத்த பிறகும் 10 ஆயிரம் ரூபாய் கேட்கிறீங்களே சார் என்று கேட்டேன். அதற்கு அவர் தாலுக்கா ஆபிஸ் செலவுக்கு கொடுக்கனும் அப்பதான் பட்டா மாறுதல் உத்தரவு ரெடியாகும் என்று சொன்னார். மேலும், அடுத்த நாள் 09.7.2021 கிராம நிர்வாக அலுவலர் திரு.வெற்றிவேல் அவர்கள் அவரது செல்போன் நெம்பர் 9080097662-லிருந்து எனது செல்போன் நெம்பர் 8667087094ற்கு கூப்பிட்டு பட்டா மாறுதலுக்காக நான் கேட்ட பணம் 10 ஆயிரம் ரூபாய் ரெடியாயிருச்சா, நேரில் கொடுத்தாலும் சரி, ஏற்கனவே அனுப்புன மாதிரி கூகுள் பேவில் அனுப்பினாலும் சரி என்று சொன்னார். அதற்கு நான் ஏற்கனவே நீங்க கேட்ட பீஸ் ரூ.19000/- கொடுத்துள்ளேன் என்றும், என் அக்கா என்னை திட்டுறாங்க சார் பட்டா மாறுதல் செய்வதற்காக எடுத்த நடவடிக்கைக்கு அத்தாட்சியாக ஏதாவது இருந்தால் கொடுங்க சார் அதை எனது அக்காவிடம் காட்டி 10 ஆயிரம் ரூபாய் பணம் வாங்கி உங்களுக்கு கொடுக்கிறேன் என்று சொன்னேன். அதன் பின்னர், திரு.வெற்றிவேல் அவர்கள் எனது பெயரிலான பட்டா மாறுதல் உத்தரவினை எனக்கு 9.7.2021 ம் தேதி வாட்ஸ் அப்பில் அனுப்பினார். பின்னர், திரு.வெற்றிவேல் அவர்கள் அவரது செல்போன் நெம்பர் 9080097662-லிருந்து எனது செல்போன் நெம்பர் 8667087094-ற்கு அன்றே கூப்பிட்டு பட்டா மாறுதல் ஆகிவிட்டது என்றும், நான் கேட்ட பணம் ரூ.10000/-த்தை எப்ப கொடுப்பீங்க என்றும் கேட்டார். நான் அதற்கு எனக்கு 2 நாள் டைம் கொடுங்க சார் பட்டா மாறுதல் உத்தரவை எனது அக்காவிடம் காட்டிவிட்டு, எனது அக்காவிடம் பணம் வாங்கி வந்து கொடுக்கிறேன் என்று சொன்னேன். பின்னர், மேற்சொன்ன எனது பெயரில் உள்ள மனை நிலத்தினை 14.7.2021 அன்று சிவகிரியை சேர்ந்த திரு.பாலசுப்பிரமணி என்பவருக்கு சுத்தக்கிரயம் செய்து கொடுத்துவிட்டேன். மீண்டும் என்னை 15.07.2021 அன்று திரு.வெற்றிவேல் அவர்கள் அவரது செல்போன் நெம்பர் 9080097662-லிருந்து எனது செல்போன் நெம்பர் 8667087094ற்கு கூப்பிட்டு ஏம்மா நீங்க 10 ஆயிரம் கொடுக்கிறதா சொன்னதால் தான் பட்டா மாறுதல் உத்தரவை ரெடி பண்ணி அதை வாட்ஸ் அப்பில் அனுப்பினேன். ஆனால், நீங்க சொன்னபடி நான் கேட்ட 10 ஆயிரம் பணத்தை கொடுக்கலியே எப்போது கொடுப்பீங்க என்று கேட்டார். அதற்கு நான் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள்

என்று கேட்டேன். அதற்கு அவர் இது என்ன மளிகை கடை வியாபாரமா, சொன்னா சொன்னபடி இருக்கனும் என்று சொன்னதால், இரண்டு மூன்று நாட்கள் பொறுங்க சார் நேரில் வந்து கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னேன். எனக்கு தெரிந்தவர்களிடம் பட்டா மாறுதலுக்கு 25 ஆயிரம் ஆகுமா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அவ்வளவு எல்லாம் செலவாகாது மணியகாரர் லஞ்சமாக பணம் கேட்டிருப்பார் என்று சொன்னார்கள். அப்போதுதான் நான் ஏற்கனவே கிராம நிர்வாக அலுவலர் திரு.M.வெற்றிவேல் என்னிடம் பணம் கேட்டு வாங்கியது லஞ்சம் தான் என்று முடிவு செய்தேன். மீண்டும் என்னை 16.07.2021 அன்று திரு.வெற்றிவேல் அவர்கள் அவரது செல்போன் நெம்பர் 9080097662-லிருந்து எனது செல்போன் நெம்பர் 8667087094ற்கு கூப்பிட்டு நான் கேட்ட பணம் 10 ஆயிரம் ரூபாயை கேட்டார். மேலும், நீங்க உங்க சொத்தை விற்றாலும், வாங்குறவங்க எங்கிட்டதான் பட்டா மாறுதலுக்கு வந்து நிக்கனும் அப்போது பட்டா மாறுதல் செய்வது மிகவும் சிரமமாகிடும். உங்களிடம் நிலத்தை வாங்குறவங்க அப்புறம் உங்களைதான் கேட்பாங்க பார்த்துக்குங்க என்றும் சொன்னார். அதற்கு நான் வருகிற செவ்வாய் கிழமை நேரில் வந்து பணம் தருகிறேன் என்று சொன்னேன். பிறகு, யோசித்து பார்த்தேன். கிராம நிர்வாக அலுவலர் திரு.வெற்றிவேலுக்கு மேலும் லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, எனக்கு தனிபட்டா மாறுதல் உத்தரவு வழங்கியதற்காக 10 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்கும் வடுகப்பட்டி-அ கிராம நிர்வாக அலுவலர் திரு.M.வெற்றிவேல் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (K.புவனேஸ்வரி) 19.07.21.

Sir, Received the above said computer typed complaint on 19.07.2021 at 17.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.07/AC/2021 u/s 7(a), 7(b) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 08.00 hrs today on 20.07.2021. Sd/- (xxxxxxxx) 20.07.2021 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tmt.K.Bhuvaneswari, W/o Kumar (Late), Revenue Colony 1st Street, Sottaympalayam, Kongampalayam, Chithode, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

Rekha 20.7.21
(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.